

# பனிமயம்

## டிசம்பர் 2023



ஆண்டுச் சந்தா
ரூ. 50/-

தனிப் பிரதி
விலை ரூ. 5/-

வெள்ளி விழா
சிறப்பிதழ்
1



# பனிமயத் தாயின் பாதத்திலிருந்து...



அனைவருக்கும் பனிமயத் தாயின் இனிய பெயரில் வாழ்த்துகள்!

பனிமயம் இதழின் வாசகர்களுக்கு ஓர் இன்ப அதிர்ச்சி! உங்கள் “பனிமயம்” இதழுக்கு இது வெள்ளிவிழா ஆண்டு! என்ன வியப்பாக இருக்கிறதா? ஆம், கடந்த 1999ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் தொடங்கிய பனிமயப் பயணம் எதிர்வரும் 2024 செப்டம்பர் மாதம் 25 ஆண்டுகளை நிறைவுசெய்யப் போகிறது. என்ன, அதற்குள் 25 ஆண்டுகள் ஆகிவிட்டனவா என்று உங்களில் சிலர் மலைக்கலாம்.

மறைமாவட்டத்தின் மேனாள் ஆயர் **மேதகு அமலநாதர்** அவர்களின் ஆசியுடன் பனிமயம் இதழ் தொடங்கப்பட்டது. அப்போதைய பங்குத் தந்தை நினைவில் வாழும் **பவுல் ராபின்ஸ்டன் அடிகளார்** இந்த மாத இதழைத் தொடங்கும்போது இந்த இதழ் “இத்திருத்தலப் பேராலய வரலாற்றை அறிவிக்கும். புனித பனிமய அன்னையின் புகழைப் பரப்பும். அவளைப் பற்றி விவிலிய, திருஅவைப் போதனைகளின் அடிப்படையில் உண்மைகளை விளக்கும். அவளைப் பற்றிப் பரப்பிடும் தவறான தப்பறைகளைத் தட்டிக் கேட்கும். அவள்பால் கொள்ளவேண்டிய அன்பை அனைவருக்கும் புரியவைக்கும்” என்று முதல் இதழில் “இறைவாக்கு” போல முன்னறிவித்தார்கள்.

“உங்களுள் இத்தகைய நற்செயலைத் தொடங்கியவர், கிறிஸ்து இயேசுவின் நாள் வரை அதை நிறைவுறச் செய்வார்” (பிலி 1:6) என்ற இறைவாக்கின்படி பனிமயம் இதழின் இந்த வெள்ளிவிழா ஆண்டு இம்மாதம் தொடங்கி, எதிர்வரும் 2024 செப்டம்பர் மாதம் நிறைவுபெறும். வெள்ளிவிழாக் கொண்டாட்ட விபரங்கள் இந்த இதழின் 25ஆம் பக்கத்தில் அச்சிடப்பட்டுள்ளன. வாருங்கள், இந்த வெள்ளிவிழாவை அனைவரும் இணைந்து கொண்டாடுவோம்.

தங்கத் தேரில் வெற்றிப் பவனி வந்த நம் அடைக்கலத் தாயான பனிமய அன்னை நமக்காகத் தொடர்ந்து மன்றாடுவாராக!

என்றும் அன்புடன்,

**அருள்பணி. குமார்ராஜா**

பங்குத் தந்தை & திருத்தல அதிபர்



உதயம் 25 தாரகை 4
பனிமயம்
நிர்வாகி & வெளியிடுபவர்
அருட்பணி. குமார்ராஜா
அதிபர் மற்றும் பங்குத்தந்தை,
தூய பனிமய அன்னை பேராலயம்,
தூத்துக்குடி
ஆசிரியர்:
அருட்பணி. குமார்ராஜா

**பனிமயம் விளம்பர விபரங்கள்**

| | | |
|---|---|---|
| அரைப்பக்க விளம்பரம் | - | ரூ. 500/- |
| முழுப்பக்க விளம்பரம் | - | ரூ. 1000/- |
| பின் பக்க அட்டை உட்புற விளம்பரம் | - | ரூ. 1500/- |
| பின் பக்க அட்டை வெளிப்புற விளம்பரம் | - | ரூ. 2000/- |

வடிவமைத்து, அச்சிட்டோர்
R. சதீஷ் குமார்
ஷைனி ஆப்செட் பிரிண்டர்ஸ்
41C, பெரைரா தெரு, தூத்துக்குடி-1

ஆண்டுச் சந்தா ரூ. 50

முகவரி : 'பனிமயம்'
தூய பனிமய அன்னை பேராலயம்
42, கடற்கரை வீதி, தூத்துக்குடி-628 001.
0461-2320854, 2330147, www.snowsbasilica.com

## இம்மாதத்திற்கான திருத்தந்தையின் செபக்கருத்து

### மாற்றுத் திறனாளிகளுக்காக...

மாற்றுத் திறனாளிகள் சமூக கவனத்தில் மையமாக இருக்க வேண்டும் என்றும், அவர்களது செயல்பாட்டு பங்கேற்பை உள்ளடக்கும் திட்டத்தை நிறுவனங்கள் வழங்கிடவும் நாம் மன்றாடுவோம்.

# உள்ளே...

## வெள்ளி விழா ஆண்டுச் சிறப்பிதழ் 1

1. விரைந்து சென்ற மரியா! . . . . . 4
அருள்பணி. ஸ்டார்வின்
2. அன்னை மரியாபோல மகன் இயேசு . . . . . 6
அருள்பணி. முனைவர் ஜெரால்டு எஸ் ரவி
3. நன்மையின் தாயே வாழ்க! . . . . . 8
ஜே.பி. பெர்னாண்டோ
4. மரியன்னையின் முன்னோடிகள் - லேயா . . . 10
அருள்பணி. குமார்ராஜா
5. பனிமயம் - மீள் பார்வை . . . . . 12
கலாபன் வாஸ்
6. அமலனைத் தாங்கிய அதிசய பெண்மை . . . . 14
ஜூடி சுந்தர்
7. மாதம் ஒரு மாதா படம் . . . . . 15
8. 2023 கிறிஸ்து பிறப்பு கால சிறப்பு நிகழ்வுகள் . 16
9. விவிலியப் போட்டி . . . . . 18
10. பனிமயப் பகிர்வு . . . . . 21
11. பனிமய சாட்சியம் . . . . . 24
12. பனிமயம் வெள்ளிவிழா ஆண்டுக் கொண்டாட்டம் . . . . . 25

# விரைந்து சென்ற மரியா!



அன்னை மரியா நற்குணங்களில் சிறந்தவராகவும் நம்பிக்கை நிறைந்தவராகவும் விளங்குகின்றார். அந்த அன்னையின் நற்குணங்களில் ஒன்றுதான் அன்று அவர் விரைந்தோடிச் சென்று எலிசபெத்தம்மாளுக்கு உதவியது (லூக் 1:39) இன்றும் நம் தேவைகளில் விரைந்தோடி வந்து நமக்கு உதவி செய்வது. மனிதர் என்றால் மனிதநேயம் உள்ளவராக இருக்க வேண்டும். அப்படிப்பட்ட மனிதநேயத்திற்கு சிறந்த இலக்கணமாகத் திகழ்பவர் நம் அன்னை. நம் அன்னையின் இந்த நல்ல குணத்தை நான்கு கோணங்களில் சிந்திக்கலாம்.

**1. அன்னையின் மனிதநேயம்.** அன்பில்லாத ஆன்மீகம் அரக்கத்தனம் என்பார்கள். அன்பே உங்கள் வாழ்வுக்கு ஆணி வேராய் அமையட்டும் என்பார் பவுலடியார். அன்னை மரி வாழ்வில் அன்புதான் ஆணி வேராய் இருந்தது. அந்த அன்புதான் "உம் உறவினராகிய எலிசபெத்தும் முதிர்ந்த வயதில் ஒரு மகனைக் கருத்தரிக்கிறார். கருவுற இயலாதவர் என்று அழைக்கப்பட்ட அவருக்கு இது ஆறாம் மாதம்" என்றவுடன் அவரை விரைந்தோடச் செய்தது. அதே மனித நேயத்தைத்தான் தன் மகன் இயேவுக்கும் அவர் கற்றுக் கொடுத்திருக்க வேண்டும். எனவேதான் இயேசு தன் போதனைகளில் அதை வெளிப்படுத்தினார். "ஓய்வுநாளிலும் மனிதருக்கு நன்மை செய்வதே முறை" (மத் 12:12), "பலி யைவிட இரக்கத்தையே விரும்புகிறேன்" (மத் 12:7) என்று போதனைகளில் மட்டுமல்லாது தனது வாழ்விலும் அதையே வாழ்ந்து காட்டினார். அவர் "சென்ற இடமெல்லாம் நன்மையே செய்து கொண்டு சென்றார்".

**2. மரியுள்ளம் பரிவுள்ளம்.** பிறருக்கு விரைந்து சென்று உதவிட வேண்டுமென்றால் பரிவுள்ளம் என்பது அவசியமாகிறது. அன்னையின் உள்ளம் அப்படிப்பட்ட பரிவு

நிறைந்ததாக இருந்தது. “இதோ ஆண்டவரின் அடிமை” என்று அன்னை சொன்னதே அவருடைய பரிவுள்ளத்திற்கு சிறந்த எடுத்துக்காட்டாய் அமைகிறது. தன்னுடைய “ஆகட்டும்” என்ற சம்மதத்தால் மட்டுமே உலக மீட்பர் மனிதராகப் பிறக்க முடியும் என்று எண்ணியதனால்தான் அவர் ஆகட்டும் என்று சொல்லி உலக மக்கள்மீது கொண்ட பரிவை வெளிப்படுத்தினார்.

கானாவூர் திருமணத்திலும் அத்தகைய பரிவுள்ளத்தை அவர் வெளிப்படுத்தினார். திருமணத்திற்கு வந்திருந்தவர் அனைவரும் தங்களைக் குறித்தும் தங்களுக்குரியவர்களைக் குறித்தும் மட்டுமே அக்கறை கொண்டிருந்த வேளையில் அன்னை மட்டும் திருமண வீட்டாரைக் குறித்து அக்கறை கொண்டிருந்தார். அந்த அக்கறையும், இரசம் தீர்ந்துவிட்டதால் அவர்கள் அவமானம் அடைந்துவிடுவார்களோ என்ற பரிவுள்ளமும்தான் அன்னையை அவர் மகன் இயேசு தன் முதல் அற்புதத்தை நிகழ்த்த தூண்டியது. இன்றும் பனிமயத் தாயைத் தேடி கத்தோலிக்கர்கள் மட்டுமல்லாது பிற சமயங்களைச் சார்ந்தவர்களும் வருகிறார்கள் என்றால் அது அன்னையின் பரிவுள்ளத்தைக் கண்டுதான் என்றால் மிகையாகாது.

**3. அன்னை அனைவரையும் அரவணைப்பவர்.** விண்ணகத் தந்தையைப் பற்றி இயேசு, “அவர் நல்லோர் மேலும் தீயோர் மேலும் தம் கதிரவனை உதித்தெழச் செய்கிறார். நேர்மையுள்ளோர் மேலும் நேர்மையற்றோர் மேலும் மழை பெய்யச் செய்கிறார்” (மத் 5:45) என்பார். மரியன்னையும் சிலுவையடியில் தான் ஏற்றுக் கொண்ட பிள்ளைகளை மட்டுமல்லாது, அனைத்துலக மக்களையும் அரவணைக்கக் கூடியவராயிருக்கிறார். அன்னையின் பிள்ளைகளில் ஒரு சிலர் தவறான போதனைகளினால் ஈர்க்கப்பட்டு அவரை விட்டுப் பிரிந்து சென்றிருந்தாலும் அவர்களுக்காகவும் அன்னை தன் மகனிடம் பரிந்து பேசிக் கொண்டிருக்கிறார். இடியைத் தாங்கியவள் மக்களின் வாழ்வில் அவர்கள் இடி போல சந்திக்கும் பல பிரச்சனைகளையும் தான் தாங்கி விடியலைக் கொடுத்துக் கொண்டிருப்பதுதானே அவளுடைய அரவணைக்கும் தாயுள்ளம்.

**4. அன்னையின் பிள்ளைகளாக நாம்.** “தாயைப் போல பிள்ளை” என்பார்கள். அன்று விரைந்து சென்று உதவிய மரியன்னை, இன்று நம் துயர் கண்டு விரைந்து வந்து உதவிடும் மரியன்னை அவர் பிள்ளைகளாகிய நாமும் விரைந்து சென்று உதவக் கூடியவர்களாக வாழ நம்மை அழைக்கிறார்.

நம்பிக்கையும் நற்செயலும் இணைந்தே செல்ல வேண்டுமென்பார் தூய யாக்கோபு (யாக் 2:14). அன்னையிடம் நம்பிக்கை கொண்டிருப்பவர்கள் வழிபாட்டில் மட்டும் அந்த நம்பிக்கையை வெளிப்படுத்தாமல் வாழ்க்கையிலும் நற்செயல்களின் வழியாக வெளிப்படுத்த வேண்டும். பொதுவாக இன்று “இம்மக்கள் உதட்டினால் நம்மைப் புகழ்கிறார்கள். அவர்கள் உள்ளமோ நம்மை விட்டு வெகு தொலைவில் உள்ளது” என்பதுபோல மரியன்னையை போற்றும் உதடுகள் இன்று மரியன்னையின் மற்ற பிள்ளைகளை தூற்றுவதும், மரியன்னையை விட்டு தூரமாய் வாழ்வதும் அன்னைக்கு சிறுமையைத்தான் கொண்டு சேர்க்கும் என்பதை மறக்கக் கூடாது.

“ஒருவனுக்கு நன்மை செய்யத் தெரிந்திருந்தும் அவன் அதை செய்யாவிட்டால் பாவம்” (யாக் 4:17) என்பதற்கேற்ப, விரைந்து நன்மை செய்யும் தாயின் பிள்ளைகளாய் இருந்து விரைந்து சென்று நாமும் நன்மைகள் செய்வோம்.



அருள்பணி. ஸ்டார்வின்

# அன்னை மரியாபோல



# மகன் இயேசு

பிறப்பை வாழ்பவர்களே வரலாற்றை படைப்பவர்கள். பிறப்பித்தவரின் விருப்பத்தை உள்ளத்தில் கொண்டு மாண்புடன் வாழ்கையில் வாழ்வு மாண்புறுகிறது. மரியா கடவுளின் உருவை, சாயலை (தொநூ 1:28) தன் வாழ்வில் முழுமையாக வெளிப்படுத்தினார். அதனாலேயே கடவுளின் மகனையே பெற்றெடுக்கும் பேறுபெற்றார்.

**அருள்நிறைந்த வாழ்வை வாழ்ந்தவர்.** ஆண்டவரைத் தம்மோடு கொண்டவர். கடவுளின் அருளை கண்டடைந்தவர் (லூக் 1:28-30). இறைவனின உரு, சாயல் அத்தனையையும் என்றும் மங்காது காத்த உயரிய மங்கை. கடவுளின் திருமுக ஒளியை தன்னில் ஒளிரச் செய்ய தன்னை அர்ப்பணித்தவர் (திபா 119) இதுவே மரியாவின் புனித வாழ்வின் நல் இலக்கணம்.

இறைவனின் மனித படைப்பே, இயற்கையை, சக மனிதனைக் காப்பதுவே. மரியா இந்த இறைவனின் திட்டத்தில் தன்னை இணைத்து உயிர்களிடத்தில் அன்பு கொண்டவராய் பிறரை வாழ வைப்பதும், தன் மகனை உலகுக்கு கையளிப்பதும், ஏன் தன்னையே தருவதும் இயல்பாக இருந்தது.

**இழப்பதே இனிமை.** மரியாவின் வாழ்வு 'இல்லையே' என்ற ஏக்கம் அல்ல, மாறாக இருக்கும் வாழ்வை இழப்பதே நோக்கமாக இருந்தது. யோசேப்பின் சொந்த ஊர் பெத்லேகமில், சொந்த வீடு இல்லையே, விடுதியில் இடமில்லையே, நிறைமாத கர்ப்பிணியாய் நெடுந்தூரப் பயணம் வந்தேனே, "மாட்டுத் தொழுவமா" என்ற முக்கல், முனகல் இல்லை. இறைத்திருவுளம் நிறைவேற்ற முகமலர்ச்சியுடன் ஏற்பதே மகிழ்வு என்று வாழ்ந்தவர்.

**பயணங்கள்.** குழந்தையைக் காப்பாற்ற அகதிகளாய் எகிப்து பயணம். எகிப்திலும் பல இடங்களில் ஒளிந்திட பயணம், மீண்டும் இஸ்ரயேல் பயணம், பின் நாசரேத் பயணம் சலிப்பு தரவில்லை. எலிசபெத்துக்கு உதவிட விரைந்து பயணம் மேற்கொண்ட மரியாவுக்கு, எருசலேம் கோயிலுக்கு யோசேப்புடனும், 12 வயது மகனுடனும் பயணம் கொண்ட மரியாவுக்கு, பயணம் என்பது நல்வாழ்வுக்கு அவசியம் என உணர்த்தியது. இப்பயணங்களே மரியாவின் மகன் இயேசுவுக்கு இறையாட்சி பணிக்கு பல பயணங்கள் மேற்கொள்ள காரணமானது என்பது மறுக்க முடியாத உண்மை.

**மரியாவின் எண்ணம் மகனில்.** தாயின் உள்ளமே வயிற்றில் இருக்கும் குழந்தையின் உள்ளமாக மாறுகிறது. தாயின் சிந்தனை, பேச்சு, செயல் வயிற்றில் இருக்கும் பிள்ளையை பாதிக்கிறது, பண்படுத்துகிறது என்பதே உளவியலாரின் கருத்து. இதை உண்மையாக்கும் வகையில் மரியாளின் எண்ணமான தாழ்ந்தோர் உயர்த்தப்பட வேண்டும், பசித்தோர் நலன்களால் நிரப்பப்படவேண்டும் என்ற கருத்தாங்கிய மரியாவின் பாடல், மகன் இயேசுவின் வாழ்வின் இலட்சியமானது. ஆம், ஏழைகளுக்கு நற்செய்தி அறிவிக்கவும், சிறைப்பட்டோர் விடுதலை அடையவும் என்று தன் பணியின் பண்பை முழக்கமிட்டார்.

**இறைத்திருவுளம் நிறைவேற்றவே மரியாளின் வேட்கை.** இதற்கு தன்னை அடிமையாக்கினார். தன்னைப்பற்றியோ தன் குடும்பம், சமூகம் பற்றியோ கவலைப்படாமல் இறைவனின் திட்டத்திற்கு மரியா தன்னைத் தந்ததுபோல், மகன் இயேசுவும் இறைத் திட்டத்திற்கே தன்னைக் கையளித்தார். துன்பத்தைத் தாங்குதலும், கேவலமான சிலுவைச் சாவை ஏற்பதும் மரியாளின் பாதையை தன் பாதையாக்கியதே, தாயைப் போல் பிள்ளை.

**உறவினர் எலிசபெத் மூதாட்டிக்கு உதவிட ஓடினார் மரியா.** கானாவூர் திருமணத்தில் குறைதீர்க்க நாடினார் மகனை. ஆம் இயேசுவும் குறைதீர்க்கும் மகனாய் தாயின் பண்பை பின்பற்றும் தாசனாய் புதுமைகள் புரியும் நல் மகனாய் இருந்தார் என்பது இயேசுவின் பணிதரும் உண்மை.

நிறைவாக, இளமைக்கால நிகழ்வுகளே பிள்ளைகளின் வாழ்வை வடிவமைக்கும். அடிப்படை உறுதியானால்தான் அடுத்தது நலமாகும், மரியா இயேசுவின் வாழ்வை அடிப்படையிலே செதுக்கினார் என்பது உண்மையே. இறைவன் தந்த பிறப்பை மேன்மையாகக் கருதி இறைத் திருவுளத்தை நிறைவேற்றியதால் இறைவனின் தாய், திரு அவையின் தாய், உலக மக்களின் தாய் என உயர்த்தப்பட்டார்.

மரியாபோல் நாமும் உயர்த்தப்பட அவரின், கீழ்ப்படிதல், நம்பிக்கை நம்மில் வளர வேண்டும். மரியன்னையின் தேவாலயங்கள், திருத்தலங்கள், அழகு ஆலயங்கள் சென்று வருவதோடு மரியன்னைபோல மனிதாபிமானத்தோடு, நம்பிக்கையோடு, இறைத்திருவுளம் அறிந்து செயல்பட உறுதி எடுத்தலே அவசியம். உங்கள் வாழ்வு எண்ணம், உங்கள் சந்ததிக்கும் வரும் என்பதை மறக்கவேண்டாம்.



**அருள்பணி. முனைவர்**
**ஜெரால்டு எஸ் ரவி**

# நன்மையின் தாயே வாழ்க!



**டிசம்பர் மாதம் என்றாலே, பல வண்ண** மலர்கள் பூத்துக் குலுங்கும்! நம் உள்ளமும், மனமும், மனமகிழ்வால், பூத்துக் குலுங்கும்! எத்துணை மலர்கள் பூத்துக் குலுங்கினாலும், “என்றும் வாடா மலராம், ‘அருள் நிறைந்த மலர்’க்கு ஈடாகுமா!”

ஏனெனில் இந்த ‘அருள் நிறைந்த மலர்’, வாழ்வு தரும் ‘வான்மலர்’, இயேசுவிடம் நமக்காகப் பரிந்து பேசி, ‘நிலை வாழ்வை’ப் பெற்றுத்தரும்!

‘அருள்’ என்றால், என்ன பொருள்?

**‘அருள்’ என்ற தமிழ் வார்த்தைக்கு**, ஆங்கிலத்தில், 'Grace' என்றும், கிரேக்க மொழியில், 'Charis' 'Chrisma' என்றும் சொல்லப்படுகின்றது. கிரேக்க மொழியிலிருந்து மொழி பெயர்க்கப்பட்ட திருவிவிலியத்தைத்தான் நாம் பயன்படுத்துகிறோம்!

‘அருள்’ என்றால், ‘இறை இயல்பு’ என்று, ஒரே வார்த்தையில் சொல்லிவிடலாம்! அதன் விளக்கம் இதுதான்: ‘இறை இயல்பு’ என்பது, இறைவனின் குணங்களை - இறைவனின் தன்மைகளைக் கொண்டது!

ஆகையால், 'அருள்' என்ற ஒரு வார்த்தைக்கு, பல பொருள்கள் இருப்பதை, நாம் பார்க்கலாம்!

'அன்பு', 'மகிழ்ச்சி', 'அமைதி', 'பொறுமை', 'பரிவு', 'நன்னயம்', 'நம்பிக்கை', 'கனிவு', 'தன்னடக்கம்' (கலா 5:22,23). இவை 'தூய ஆவியாரின் கனிகள்' (கலா 5:22,23), 'இறை அருள்' (கொலோ.4:18), 'கடவுளின் அருள்' (உரோ 5:15). என்றும், 'கடவுளின் குணங்கள்' (நெகே 9:17,31; யோனா 4:2) என்றும் அறிந்து கொள்ளலாம்!

"கீழ்ப்படிதல்", "தாழ்ச்சி" (பிலி.2:7,8)

"தூய்மை" (திவெ.4:8; எசா. 6:3)

"சகோதர அன்பு" (1தெச.4:9; மத்.22:39)

"இரக்கம்" (நெகே.9:17)

"நீதி" நேர்மை" (திபா.89:14)

"உண்மை" (திபா.117:2)

"அருட்கொடைகள்" (உரோ.12:6-8; 1பேது.4:10)

இப்படிச் சொல்லிக் கொண்டே போகலாம்!

"அருளின் இருப்பிடமான கடவுள்" (கலா 1:15; கொலோ.4:18),

"அருள் நிறைந்தவளுடனே இருக்கிறார்" (லூக் 1:28)

"இறையருளால் தேர்ந்தெடுக்கப்பட்ட" (உரோ 11:5), "அருள் நிறைந்த மரியாள்", எல்லா அருட்கொடைகளையும் பெற்றவள், "நம் இறைவனின் தாய்".

"செபமாலை" என்றாலே, "அக்டோபர்" மாதம்தான், நம் எல்லோருக்கும் நினைவில் வரும். ஆனால் செபமாலையின் இரட்டைக் குழந்தைகளுள், ஒன்றின் பெயர், "மே மாதம்!" அக்டோபர் மாதத்தைப் போல், மே மாதம் முழுவதும், செபமாலை சொல்கிறோம்!

தலைமகன் இயேசுவை (லூக் 2:7; மத் 1:16), அன்பு செய்யும் மரியாளின் பிள்ளைகளான, நம் எல்லாருடைய இதயத்திலிருந்தும், எழும் இந்த இனிய இறைவேண்டல், "அருள் நிறைந்த மரியே" என்ற செபம்!

புனித பவுல், தனது திருமுகத்தில் சொல்லியபடி, இறைவனிடம் வேண்டுவதற்கு (1 தெச 5:17) ஏற்ற, "மலர்மாலை" இந்த செபமாலை! பார்வை இழந்தோரும் படிக்கும் நூல் இந்த செபமாலை!

"நேரம் போகவில்லையே!" என்று, ஏங்குபவர்களுக்கு, "இதுவே தகுந்த நேரம் - இதுவே தகுந்த காலம்" (2 கொரி 6:2) என்று அழைக்கிறது, இந்தச் செபமாலை!

சொன்ன செபத்தையே, திரும்பத் திரும்பச் சொல்லுவதால், கை செபமாலை மணியில், இதழ்கள் செபத்தை முணுமுணுக்க, மனம் சுற்றுலா வர, "செபமாலை சொன்னோம்!" என்ற, மனநிறைவுடன் வருகிறோம்!

குழந்தையானது, தன் தாயை, "அம்மா! அம்மா!" என்று, ஆயிரம் முறை கூப்பிட்டாலும், "அம்மா" என்ற வார்த்தை, குழந்தைக்கு சலிக்கிறதேயில்லை! தேனாக இனிக்கிறது! என்பதே உண்மை! ஏனென்றால், குழந்தைக்கு, அம்மாவின்மீது, அளவுகடந்து அன்பு!

'நற்கருணை என்னும் திருப்பலி', 'நம்பிக்கையின் மறைபொருள்' என்றால், 'செபமாலை, நம்பிக்கையின் உரைகல்'!

'செபமாலை'யை இலத்தின் மொழியில், 'ரொசாரியும்' (Rosarium) என்பார்கள். 'ரொசாரியும்' என்றால், 'ரோசா தோட்டம்' என்று பொருள்.

ஏழை எளியவர்களுக்கு, ஆறுதல் அளிக்கும் அருமருந்து! நம் எல்லோருக்கும் ஓர் ஆன்மீக அருமருந்து! இறைவனின் இல்லத்திற்குள் செல்ல, வாயிற்படிக்கற்கள், இந்த செபமாலை மணிகள்!

எங்கள் இறைவனின் தாயே! மாசற்ற மலரே! மே மாத மலரே! அருள் நிறைந்த மரியே! எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்!



ஜே.பி. பெர்னாண்டோ

*மரியன்னையின் முன்னோடிகள்: 5*

# யாக்கோபின் மனைவி லேயா!



பழைய ஏற்பாட்டின் மூதாதையர்களுள் ஒருவரான யாக்கோபுக்கு இரண்டு மனைவியர் என்பது நாம் அறிந்ததே. நாம் அறியாத வியப்பான தகவல் என்ன என்றால், ராகேல், லேயா என்னும் அந்த இரண்டு மனைவியருமே அன்னை மரியாவின் முன்னோடிகள் என்னும் பட்டியலில் இடம்பெறுகின்றனர் என்பதுதான்.

கத்தோலிக்கத் திருஅவையின் இரண்டாயிரம் ஆண்டு வரலாற்றில் அன்னை மரியாவைப் பற்றி எழுதிய திருஅவைத் தந்தையர்கள், புனிதர்கள், மாமனிதர்கள் எண்ணற்றோர். அவர்களே அன்னை மரியாவைப் பல்வேறு கோணங்களில் பார்த்ததோடு, அவற்றை விவிலியத்தின் ஒளியிலும், திருமரபின் பார்வையிலும் ஆவணப்படுத்தியுள்ளனர். எனவேதான், அவர்கள் பழைய ஏற்பாட்டின் மாண்புறு பெண்மணிகள் அனைவரையுமே ஏதோவொரு வகையில் அன்னை மரியாவின் முன்னோடிகளாகப் பார்த்ததில் வியப்பொன்றும் இல்லை.

அந்த வகையில் யாக்கோபின் மனைவியான லேயா, ராகேல் இருவரையுமே நமது முன்னோர்கள் அன்னை மரியாவின் முன்னோடிகளாக நமக்கு எடுத்துரைத்துள்ளனர். லேயாவை நாம் தொடக்க நூலில் சந்திக்கிறோம்.

“லாபானுக்கு இரண்டு புதல்வியர் இருந்தனர். மூத்தவள் பெயர் லேயா; இளையவள் பெயர் ராகேல். ஆனால் லேயா மங்கிய பார்வை உடையவள். ராகேலோ வடிவழகும் எழில் தோற்றமும் உள்ளவள்” (தொநூ 29:16-17) என்பதுதான் லேயாவைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கும் அறிமுகம். அதிலேயே லேயா முக்கியத்துவம் குறைந்த பெண்ணாகக் காட்டப்பட்டுவிட்டார். தொடர்ந்து, யாக்கோபு வந்து சேர்ந்ததும் அவரும் லேயாவைவிட ராக்கேலையே விரும்பித் திருமணம் செய்ய விரும்பினார். ஆனால், மாமனாரான லாபான் யாக்கோபை ஏமாற்றித் தமது மூத்த மகளான லேயாவை அவருக்குத் திருமணம் செய்து கொடுத்துவிட்டார். தாம் ஏமாற்றப்பட்டதை அறிந்த யாக்கோபு ராகேலுக்காகக் கூடுதல் ஏழாண்டுகள் லாபானிடம் வேலைசெய்து, ராகேலையும் திருமணம் செய்துகொண்டார். “யாக்கோபு ராகேலுடன் கூடிவாழ்ந்தார். அவளை **லேயாவைவிட அதிகம் நேசித்தார்**. லாபானிடம் மேலும் ஏழு ஆண்டுகள் வேலை செய்தார்” (தொநூ 29:30). இதைவிட ஒரு பெண்ணுக்கு வேறு துயரம் ஏது? இந்தத் துயருடன்தான் வாழ்நாள் முழுவதும் அவதிப்பட்டார் லேயா.

ஆனாலும், கடவுளின் பார்வை வேறு, மனிதரின் பார்வை வேறல்லவா? எனவே, கடவுள் லேயாமீது பரிவுகொண்டார். “லேயா வெறுப்புக்குள்ளானதை ஆண்டவர் கண்டு அவருக்குத் தாய்மைப்பேறு அருளினார்.

ராகேலோ மலடியாகவே இருந்தார். லேயா கருத்தாங்கி ஒரு மகனைப் பெற்றெடுத்தார். 'ஆண்டவர் என் தாழ்நிலையைக் கண்ணோக்கினார். இப்பொழுது என் கணவர் என்மீது அன்பு கூர்வார் என்பது உறுதி' என்று கூறி, அவனுக்கு 'ரூபன்' என்று பெயரிட்டார்" (தொடக்க நூல்-29:31-32).

இந்த இடத்தில்தான் லேயா மரியன்னையின் முன்னோடியாகக் காட்சி தருகிறார். நல்லது ஏதும் வர இயலாத நாசரேத் என்னும் ஊரிலிருந்துதான் கடவுளின் தாயான மரியாவைத் தோன்றச் செய்தார் இறைவன். "அவர் தம் அடிமையின் தாழ்நிலையைக் கண்ணோக்கினார்" (லூக் 1:48) என்னும் மரியாவின் சொற்களை முதன் முதலாக லேயாதான் பயன்படுத்தினார் என்பது வியப்பல்லவா?

லேயாவின் மகனான ரூபன் ஒருவகையில் இயேசுவின் முன்னோடியாகத் திகழ்கிறார் என்பது கூடுதல் வியப்பு. யோசேப்பின்மீது பொறாமை கொண்டு அவனுடைய சகோதரர்கள் அவனைக் கொல்ல விரும்பியபோது, ரூபன்தான் "அவன் இரத்தத்தைச் சிந்தாதீர்கள். அவனை இ;ந்த ஆழ்குழிக்குள் தள்ளிவிடுங்கள்" என்று அவர்கள் கையிலிருந்து யோசேப்பைத் தப்புவித்துத் "தம் தந்தையிடம் சேர்ப்பிக்கும் நோக்கம் கொண்டிருந்தார்" (தொநூ 37:22). தம் சகோதரர்களான இஸ்ரயேலர் அனைவரையும் அழியவிடாமல், தம் விண்ணகத் தந்தையிடம் சேர்க்கும் பணியைச் செய்தவரான இயேசுவுக்கு இந்த வகையில் ரூபன் முன்னோடியாகிறார். எனவே, ரூபனின் தாயான லேயா, புதிய ஏற்பாட்டின் ரூபனான இயேசுவின் தாய் மரியாவின் முன்னோடியாகிறார்.

**1. லேயாவின் இறைப்பற்று.** எப்போதெல்லாம் ஒரு குழந்தையைப் பெற்றாரோ, அப்போதெல்லாம் கடவுளைப் போற்றி, குழந்தைகளுக்குப் பெயரிடும் பழக்கம் கொண்டிருந்தார் லேயா. எடுத்துக்காட்டாக ஆறாவது மகன் பிறந்தபோது, "லேயா 'கடவுள் எனக்கு ஒரு சிறந்த கொடை கொடுத்துள்ளார். இனிமேல் என் கணவர் என்னைப் பெருமையாக நடத்துவார். ஏனெனில், நான் அவருக்கு ஆறு புதல்வரைப் பெற்றிருக்கிறேன்' என்று கூறி அவனுக்குச் செபுலோன் என்று பெயரிட்டார்" (தொநூ 30:20).

**2. யூதாவின் தாய்.** யாக்கோபுக்குத்தான் கடவுள் "இஸ்ரயேல்" என்னும் பெயரைக் கொடுத்தார். அவரது 12 மகன்களின் பெயரால்தான் இஸ்ரயேலின் 12 கோத்திரங்களும் அழைக்கப் படுகின்றன. இந்தப் பன்னிரு கோத்திரங்களில் நான்காவதான யூதாவின் குலத்தில்தான் இயேசு பிறந்தார் என்பது ஒரு சிறப்பு.

தாம் இறக்கும் முன் யாக்கோபு தன் பன்னிரு பிள்ளைகளுக்கும் ஆசி வழங்கினார். அப்போது யூதாவுக்கு அவர் வழங்கிய ஆசி தனிச்சிறப்பு மிக்கது. "யூதா, நீ ஒரு சிங்கக் குட்டி. அரசுரிமை உடையவர் வரும்வரையில், மக்களினங்கள் அவருக்குப் பணிந்திடும் வரையில், யூதாவைவிட்டு செங்கோல் நீங்காது. அவன் மரபைவிட்டு கொற்றம் மறையாது" (தொநூ 49:9-10) என்ற இறைவாக்கு வரிகள் யூதாவுக்கும், அவர் வழிமரபில் வந்த இயேசுவுக்கும் பொருந்துகின்றன.

இயேசு "யூதாவின் சிங்கம்" என்று அழைக்கப் படுவதை இங்கே நான் நினைவுகூரலாம். மேலும், இயேசுவின் பிறப்புச் செய்தியை மரியாவுக்கு அறிவித்த கபிரியேல் தூதர் "அவர் யாக்கோபின் குடும்பத்தின்மீது என்றென்றும் ஆட்சி செலுத்துவார். அவருடைய ஆட்சிக்கு முடிவே இராது" (லூக் 1:33) என்று முன்னுரைத்ததையும் நாம் நினைவுபடுத்திக்கொள்ளலாம். லேயா யூதாவின் தாய் என்றால், மரியாவை யூதாவின் சிங்கக் குட்டியான இயேசுவின் தாய் என்று அழைப்பது பொருத்தமல்லவா?

**3. பொறுமையின் சிகரம்.** லேயாவின் இன்னொரு சிறப்பு தனக்கு இழைக்கப்பட்ட எல்லா அநீதிகளையும், துயரங்களையும் தாங்கிக்கொண்டது. அன்னை மரியாவும் லேயாவைப் போலவே பொறுமை, தாழ்ச்சி, எளிமை போன்ற இறையாட்சியின் விழுமியங்களுக்கு எடுத்துக் காட்டாய்த் திகழ்கிறார்.

இவ்வாறு, யாக்கோபின் மனைவியான லேயா, யூதாவின் குலத்தவரான யோசேப்பின் மனைவியான மரியாவுக்கு முன்னோடியாகத் திகழ்கிறார்.



**அருள்பணி. குமார்ராஜா**

# 'பனிமயம்' 2018 – மீள் பார்வை 38

### வாழ்வின் மகத்துவம்

குரு நானக்கை, மிகப் பெரிய பணக்காரர் ஒருவர் விருந்துக்கு அழைத்திருந்தார். குரு நானக்கும் அவரது இல்லத்திற்குச் சென்றிருந்தார். அவர்கள் உணவருந்திக் கொண்டிருந்தபோது, அப்பணக்காரர், எனது செல்வங்களைப் பற்றியும், விலையுயர்ந்த நகைகள் மற்றும் அழகிய வேலைப்பாடுகள் நிறைந்த பொருட்களைப் பற்றியும், பெருமையாகப் பேசிக் கொண்டிருந்தார். இந்தப் பொருள் இந்நாட்டில் இவ்வளவு விலைக்கு வாங்கினேன், அந்தப் பொருள் அந்த நாட்டில் அவ்வளவு விலைக்கு வாங்கினேன் என்று பட்டியலை நீட்டிக் கொண்டே போனார்.

இதனை எல்லாம் உன்னிப்பாகக் காதில் வாங்கிக் கொண்டார் குருநானக். விருந்து முடிந்த பிறகு, தனது பையிலிருந்து ஒரு குண்டூசியை எடுத்து அந்தப் பணக்காரரிடம் கொடுத்துவிட்டு, "நீ இறந்து மேல் உலகம் வரும்போது இந்த ஊசியை உன்னோடு கொண்டு வா" – என்றார்.

"ஒரு குண்டூசியை இறந்த பிறகு உன்னால் எடுத்துச் செல்ல முடியாது. ஆனால், இவ்வளவு செல்வங்களைச் சேர்த்து வைத்து என்ன செய்யப் போகிறாய்? உன்னிடம் இருப்பதை, இல்லாதவர்களோடு பகிர்ந்து வாழ்ந்து பார். வாழ்வின் மகத்துவம் உனக்குப் புரியும்" என்றார். குருநானக் என்ற சீக்கிய குரு. – **அருள்திரு. ஆ. லொயோலா சே.ச.**

### இறைவனின் தாய்

இறைமகனின் தாய் கன்னி மரியா, மூவொரு இறைவனது சங்கமம். இயேசுவை நாம் இறைமகன் என்று புகழும்போது, இயேசுவைப் பத்து மாதங்கள் சுமந்து பெற்ற தாயை மறக்க முடியுமா? மரியா கருவிலிருந்து கல்லறை வரை இயேசுவோடு வாழ்ந்த முதல் மூத்த சீடர் இவரே!

"திருச்சபையின் மூத்த மகன் தேவதாய் மரியா" – என்று திருத்தந்தையர்களால் பாராட்டும் புகழும் பெற்றவர். இறைமகன் கிறிஸ்துவை கருவில் சுமந்த திவ்விய நற்கருணைப் பேழை இவர்.



"இதோ! இறைவனின் அடிமை" என்று வானதூதரிடம் சொல்லி, இயேசுவின் தாயாக மாறுவதற்குச் சம்மதம் தெரிவித்தவர். – ஆசிரியர் அற்புதசாமி.

**புதிதாய்ப் பிறப்போம்.... வாரீர்!**

ஊரெங்கும் கிறிஸ்துமஸ் விழாக்கோலம். கிறிஸ்து பிறப்பு விழாவிற்காக அனைத்து ஆலயங்களும் தயாராகிக் கொண்டிருந்தன. கடைகள் வண்ண வண்ண மின் விளக்குகளுடன் குடில் அமைத்து நட்சத்திரங்களைத் தொங்க விட்டிருந்தனர். பார்ப்பதற்குக் கண்கொள்ளாக் காட்சியாய் இருந்தது.

மணி பத்து.... பல்வேறு பங்கைச் சார்ந்த கிறிஸ்துமஸ் கேரல்ஸ் வாகனங்கள் அலங்காரங்களுடன் பவனி ஆரம்பித்தது. அத்தனை வாகனங்களிலும் நற்செய்தி வாசகங்கள் மின்னின. நடந்து வந்த இளைஞர்கள் கையில், நற்செய்திப் பதாகைகளுடன் எவ்வித ஆரவாரமில்லாமல் அறமதியாக நடந்து வந்தனர். வழக்கமான குத்துப் பாட்டும், ஆர்ப்பாட்டமும் இல்லை. சொந்த ஊருக்குக் கிறிஸ்துமஸ் கொண்டாட வந்தவர்களுக்கு இது வியப்பாக இருந்தது. – **ம. வெனான்சியுஸ்.**

**ஏழ்மையின் அழகு!**

தேவ மைந்தன், சத்திரத்தில் இடம் கிடைக்காமல், மாட்டுத் தொழுவத்தில் பிறக்கின்றார். ஏழ்மையில் அழகும் இன்பமும் இருக்கிறது. ஏழ்மையிலும் இந்த உலகத்தில் சந்தோஷமாக வாழலாம் என்பதை இந்தப் பிறப்பு நமக்கு எடுத்துக் காட்டுகிறது. ஏழ்மையினை நினைத்து வருத்தப்பட வேண்டாம். ஏழ்மையில் இருந்து இந்த மகிமைக்குரிய தேவன் வந்தார் என்றால், நாமும் ஏழ்மையிலிருந்து மகிமை உள்ளவர்களாக உருவாக முடியும் என்ற தன் நம்பிக்கையையும் நமக்கு இயேசுவின் பிறப்பு கொடுக்கிறது. – **அருள்பணி. பிளேவியன்.**

**என்ன கொடுப்பேன்?**

இவ்வளவு நாள்கள் கிறிஸ்துவுக்குப் பிறப்பு விழா கொண்டாடியிருக்கிறோமே!.... என்றைக்காவது பிறந்த நாள் பரிசு கொடுத்திருக்கிறோமா?..... ஏன் கொடுக்க வேண்டும்? அவர்தான் இறைவன் ஆயிற்றே! அவருக்குத் தேவை என்ன இருக்கப் போகிறது?..... என்று கேள்விகளை அடுக்கிக் கொண்டே போகிறீர்களா?..... குழந்தை இயேசு நம்மிடம் சில பரிசுகளை எதிர்பார்க்கிறார்...... இல்லை.... இல்லை..... நம் இதயத்தைப் பரிசாய்க் கேட்கிறார்.... அதுவும், சுவை மிகுந்த கனிகளைப் பெற்ற இதயத்தைப் பரிசாய்க் கேட்கிறார்! **– ம. பனிமய சுகந்தி ஜிட்வின்.**

**அன்பை விதைப்போம்!**

அமைதியின் மன்னராம் பாலன் இயேசுவின் அன்பு, அருள், ஆற்றல் நம்மிடையே மலர வேண்டும். உலகெலாம் படைத்த பரம்பொருளாகத் திகழும் இறைவன், பிறப்பிலே எளிமையைக் கடைப்பிடித்து, எளிமையின் அழகை வெளிப்படுத்தியுள்ளார். ஆதரவற்றோர், பாதிக்கப்பட்டோர், வறுமையில் வாடுவோர், திக்கற்றோர் போன்றவர்களைச் சந்தித்துப் பேசும்போதும், ஆறுதல் மொழிகளையும் உதவிகளையும் செய்யும்போது, பாலன் இயேசுவின் அன்பை விதைக்கிறோம் என்பதில் ஐயமில்லை! – தா. வேர்ஜின்.

**இறைவன் நம்மோடு**

'இம்மானுவேல்' என்றால், 'இறைவன் நம்மோடு' என்று பொருள். இறைவன் நம்மோடு என்றும் வாழ்கின்றார் என்பதற்கு அடையாளமான அவரது பிறப்பு, நாம் தனியாக இல்லை, இறைவன் நம்மோடு இருக்கின்றார் எனும் நம்பிக்கையை நம் நெஞ்சில் நிரப்புவதற்காகவே அவர் பிறந்தார். கிறிஸ்துவை அழைக்க ஒரு வழி இருக்கிறது. அவர், புகழ்ச்சியை விரும்புவதில்லை. செல்வத்தின் மூலமோ, மிகச் சிறந்த சொற்பொழிவு மூலமோ அவரை வசப்படுத்த முடியாது. அன்பிற்கு மட்டுமே அவர் வசப்படுவார். நம் இதயத்தில் பிறர்மீது கொண்ட அன்புடன் அவர்மீது பக்தியும் இருக்கிறது என்றால், அவர் நம் உள்ளத்தில் நிச்சயம் பிறப்பார். புனித பிரான்சிஸ் அசிசியார் கண்டதுபோல், நம்மாலும் ஊனும் உடலும் உள்ள கிறிஸ்துவைக் காணமுடியும். **– எம். பவுல்ராஜ்.**



**கலாபன் வாஸ்**



தங்கத் தேர்
8
கவிதைகள்

# அமலனைத் தாங்கிய அதிசய பெண்மை



அன்னை மரியே அமல உற்பவியே
அகிலம் போற்றும் அற்புத நாயகியே
அருளைப் பொழிந்து அகமகிழ்வாயே
அமலனை தாங்கிய அதிசய பெண்ணே

விண்ணோர் போற்றும் வியத்தகு அன்னையே
மண்ணோர் ஏற்றும் மதிப்புறு பயனே
விழிநீர் துடைக்கும் விசித்திர அழகே
வெள்ளை மனதால் கொள்ளை கொண்டாயே

மாசறு கன்னியே மாதரின் அரசியே
மாண்புறு சொல்லால் மானுடம் பாடுதே
மாதவம் புரிந்தே மதிப்படைந்தாயே
மாநிலம் முழுதும் மகிழ்வித்தாயே

கலங்கி தவிப்போரின் கலங்கரை விளக்கே
கண்ணீர் துடைக்கும் கற்பகத் தருவே
கடலில் கலங்களை வழிகாட்டும் விளக்கே
கற்பனைக் கெட்டாத கவின்மிகு அழகே

தங்கத் தேரினிலே தவழ்ந்து வந்தவரே
தரணியில் மக்கள் மனம் மகிழச் செய்தவரே
தாயுனை நாடிடவே துன்பம் தீருதம்மா
சேய்எம்மை காத்திடவே நின்சேவை வேண்டுமம்மா



ஜூடி சுந்தர்

## மாதம் ஒரு மாதா படம் : 43



**மி. லூர்து லினெட்**
மாதா கோயில் பங்கு
வியாகுல மாதா அன்பியம்



# தூய பனிமய அன்னை திருத்தலப் பேராலயம், தூத்துக்குடி
## 2023 கிறிஸ்து பிறப்பு கால சிறப்பு நிகழ்வுகள்

### 1. கிறிஸ்து பிறப்பு விழா வழிபாட்டு விபரங்கள்



24.12.2023 ஞாயிறு இரவு 11.00 மணிக்குப் பேராலயக் கதவுகள் திறக்கப்படும். 11.15 மணிக்குப் பாடகர் குழுவினரால் கிறிஸ்துமஸ் பாடல்கள் இசைக்கப்படும். 11.50 மணிக்கு நள்ளிரவுத் திருப்பலி தொடங்கும்.

மறுநாள் (25.12.2023 திங்கள்) காலை 06.30 மணிக்கும், 08.00 மணிக்கும் தமிழில் திருப்பலியும், 09.30 மணிக்கு ஆங்கிலத்தில் திருப்பலியும் நடைபெறும். நண்பகல் 12.00 மணிக்கு சிறப்புத் திருப்பலி நடைபெறும். ***மாலையில் திருப்பலி நடைபெறாது.*** மாலை 05.30 மணிக்கு நற்கருணை ஆசீரும், திவ்விய பாலன் ஆசீரும் நடைபெறும்.

### 2. கிறிஸ்துமஸ் விழாக் கலைநிகழ்ச்சிகள்

கிறிஸ்துமஸ் (25.12.2023 திங்கள்) அன்று மாலை 06.30 மணிக்கு “பனிமய இளையோரின்” முன்னெடுப்பில் கிறிஸ்துமஸ் விழாக் கலைநிகழ்ச்சிகளும், பனிமயம் இதழின் வெள்ளிவிழாத் தொடக்க நிகழ்வும் நடைபெறும்.

### 3. மாசில்லாக் குழந்தைகள் விழா



மாசில்லாக் குழந்தைகள் திருவிழாவை முன்னிட்டு ***28.12.2023 வியாழன் அன்று இரண்டாவது திருப்பலி காலை 07.00 மணிக்கு*** நடைபெறும். திருப்பலியின் முடிவில் குழந்தைகள் ஆசிர்வதிக்கப்படுவார்கள். பாலன் ஆசீர்வாதம் நடைபெறும்.

### 4. திருமண விழா நாயகர்களின் நன்றித் திருப்பலி



பேராலயப் பங்கைச் சேர்ந்த திருமண பொன்விழா, வெள்ளிவிழா நாயகர்கள், மற்றும் திருமணமாகி 40 ஆண்டுகள், 60 ஆண்டுகள், 70 ஆண்டுகள், அதற்கு மேல் நிறைவு செய்யும் தம்பதியருக்கான சிறப்பு நன்றித் திருப்பலி ***28.12.2023 வியாழன்*** மாலை 05.30 மணிக்குப் பேராலயத்தில் நடைபெறும்.

### 5. மறைக்கல்வி மாணவர்களின் கிறிஸ்துமஸ் விழா

நமது பங்கின் மறைக்கல்வி மாணவ, மாணவியர் பங்கேற்கும் கிறிஸ்துமஸ் விழா ***28.12.2023 வியாழன்*** மாலை 06.45 மணிக்கு அந்தோனியார் அரங்கத்தில் நடைபெறும். இவ்விழாவில் விழாக் காணும் தம்பதியருக்குப் பாராட்டுச் சான்றிதழும், நினைவுப் பரிசுகளும் வழங்கப்படும்.

### 6. திருக்குடும்ப சபைத் திருவிழா



***திருக்குடும்ப விழா***வாகிய ***31.12.2023 ஞாயிறு*** அன்று நமது பங்கின் திருக்குடும்ப சபையினர் தங்கள் சபைத் திருவிழாவைக் கொண்டாடுவர். அன்றைய இரண்டாவது திருப்பலியில் ***புதிய பொறுப்பாளர்கள்*** பணி ஏற்பதுடன், புதிய உறுப்பினர்களுக்கு நாடா அணிவிக்கப்பட்டு, சபையில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

## 7. ஆண்டின் இறுதி நாள் நன்றி வழிபாடு

இந்த ஆண்டின் இறுதி நாளான ***31.12.2023 ஞாயிறு*** அன்று மாலைத் திருப்பலி முடிந்ததும் ***நன்றி வழிபாடும்,*** தொடர்ந்து ஒப்புரவு அருள்சாதனமும் வழங்கப்படும்.

## 8. புத்தாண்டு வழிபாட்டு விபரங்கள்

**31.12.2023** ஞாயிறு ***இரவு 11.15*** மணிக்குப் பேராலயக் கதவுகள் திறக்கப்படும். ***11.30*** மணிக்குப் பாடகர் குழுவினரால் கிறிஸ்துமஸ்- புத்தாண்டுப் பாடல்கள் இசைக்கப்படும். ***12.00*** மணிக்கு பேராலய மணிகள் முழங்க, பனிமய அன்னைக்கு குடும்பங்களை ஒப்புக்கொடுக்கும் செபம் மன்றாடப்படும். பின்னர், புத்தாண்டுத் திருப்பலி நடைபெறும்.

## 9. மேதகு ஆயரின் கரங்களால் புதுநன்மை



**01.01.2024** திங்கள் அன்று ***காலை 06.30*** மணிக்குச் காலைத் திருப்பலி நடைபெறும். ***காலை 08.00 மணிக்கு மேதகு ஆயர் ஸ்டீபன்*** அவர்களின் தலைமையில் நடைபெறும் புத்தாண்டு சிறப்புத் திருப்பலியில் குழந்தைகளுக்குப் புதுநன்மை வழங்கப்படும். அன்று காலை **09.30** மணிக்கு ஆங்கிலத்தில் ***திருப்பலி நடைபெறாது.*** மாறாக, நண்பகல் **12.00** மணிக்குப் புத்தாண்டு சிறப்புத் திருப்பலி நடைபெறும்.

அன்று மாலையில் திருப்பலி நடைபெறாது. மாறாக, மாலை **05.30** மணிக்கு ***நற்கருணை ஆசீரும், திவ்விய பாலன் ஆசீரும்*** நடைபெறும்

## 10. முதியோர், நோயாளருக்கு நற்கருணை




**05.01.2024** தலைவெள்ளி அன்று காலையிலும், மாலையிலும் பங்கின் முதியோர், நோயாளருக்கு நற்கருணை வழங்கப்படும்.

## 11. ஆண்டின் முதல் சனி வழிபாட்டு விபரங்கள்

**06.01.2024** ஆண்டின் முதல் சனியாக இருப்பதால், காலை **11.00** மணிக்கு செபமாலையும், **11.30** மணிக்கு சிறப்புத் திருப்பலியும் நடைபெறும்.

மாலை **06.30** மணிக்கு ***சப்பரப் பவனியும்,*** தொடர்ந்து ***நற்கருணை ஆசீரும், திவ்விய பாலன் ஆசீரும்*** நடைபெறும்.



## 12. திருக்காட்சிப் பெருவிழா

திருக்காட்சிப் பெருவிழாவான **07.01.2024** ஞாயிறு அன்று வழக்கமான திருப்பலிகள் நடைபெறும். மாலை **06.30** மணிக்கு ***நற்கருணை ஆசீரும், திவ்விய பாலன் ஆசீரும்*** நடைபெறும்.

**அருள்பணி. குமார்ராஜா**
அதிபர் & பங்குத் தந்தை

# விவிலியப் போட்டி 106

தயாரித்தவர் : சகோ. பிரகாசி FBS

## திருப்பாடல் 56 - 60

விடையுடன் அதிகாரம், வசனம் எழுதுக

**கோடிட்ட இடத்தை நிரப்புக :**

1. ........................................ உமது பேரன்பு வானளவு உயர்ந்துள்ளது.
2. ........................................ தோற்பையில் என் கண்ணீரை சேர்த்து வைத்துள்ளீர்.
3. என் கடவுள் தமது ........................................ என்னை எதிர்கொள்ள வருவார்.
4. கடவுளே! நீர் ........................................ வெறுத்து ஒதுக்கிவிட்டீர்.
5. என் கடவுள் தமது பேரன்பால் என்னை ........................................ வருவார்.
6. பிற இனத்தார் அனைவரையும் தண்டிக்க ........................................ .
7. ........................................ கடவுள் எனக்கு அரண்.
8. ........................................ என் ஆற்றல்.
9. ........................................ உள்ளம் உறுதியாய் இருக்கின்றது
10. ........................................ தமது தூயகத்தினின்று இவ்வாறு உரைத்தார்.

**விடைகளைக் கோர்த்தார் பிறப்பின் இறைப்புகழ்ச்சி கிடைக்கும்.**

**விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் : 15.12.2023**

## விவிலியப் போட்டி 105

**நவம்பர் 2023** — விடைக்குறிப்புகள்

### திருப்பாடல் 51 - 55

| | | |
|---|---|---|
| 1. | வல்லமையால் | திபா 54:1 |
| 2. | வெண்ணெயிலும் | திபா 55:21 |
| 3. | பாவம் | திபா 51:4 |
| 4. | பலியினால் | திபா 51:16 |
| 5. | நெஞ்சமே | திபா 51:17 |
| 6. | துணையாய் | திபா 52:4 |
| 7. | களிகூர்வராக | திபா 58:6 |
| 8. | கடுந்துயரம் | திபா 54:4 |

## உங்கள் கவனத்துக்கு

பனிமய அன்னை பேராலயப் பங்கைச் சேர்ந்தவர்கள் விடைகளுடன் தங்கள் பெயர், அன்பியப் பெயர், குடும்ப அட்டை எண் மூன்றையும் ஒரு தாளில் எழுதி பங்கு அலுவலகத்தில் சேர்க்கவும். ஒரு குடும்பத்துக்கு ஒருவர் விடை எழுதினால் போதும். பிற பங்குகளைச் சேர்ந்தவர்கள் மட்டும் விரும்பினால் விடைகளை வாட்ஸ்அப்பிலும் இந்த எண்ணுக்கு அனுப்பலாம் :



**94893 19976** அலைபேசி எண் மாற்றத்தைக் கவனியுங்கள்.

## விடை அனுப்பியவர்கள் மொத்தம் : 198

### I. பனிமய மாதா பேராலய அன்பியங்களிலிருந்து சரியான விடை எழுதியவர்கள் : 118

### விடை எழுதிய அன்பியங்கள் : 28

## பரிசு பெறுபவர்கள் : 4

1. சிறுமலர் அன்பியம் — **செலஸ்டின்**
2. சூசையப்பர் அன்பியம் — **மோனிஷா காஸ்பின்**
3. திருச்சிலுவை அன்பியம் — **ரிமோனி டிவோட்டா**
4. வியாகுல மாதா அன்பியம் — **லூர்து லினட்**

## பாராட்டுக்குரியவர்கள் : 114

**அந்தோனியார் அன்பியம்**
5. பிருந்தா சார்லஸ்
6. லூக்காஸ் சகாயம்
7. சரோஜா
8. ரீனா மொறாயிஸ்
9. ஜெயா

**அன்னை தெரசா**
10. சுரேஷ் பிரேமா
11. ரெயிசா சுஜய்
12. சுகன் மோனிஷா
13. ரொவினா

**அன்னை வேளாங்கன்னி**
14. டென்சி
15. நான்சி
16. ராகுல் ராபர்ட்
17. ஜொசிட்டா
18. ஆல்வின் மோத்தா

**கிறிஸ்தரசர்**
19. செலஸ்கி கிளமென்ட்
20. ரெக்ஸ் கிரீன்வெல்
21. ஜெகன் பெமினா
22. லூரட் வசந்த்
23. ஜூலியட் சாவியோ

**தஸ்நேவிஸ் மாதா அன்பியம்**
24. இருதயம்மாள்

**திவ்யபாலன் அன்பியம்**
25. சகாயராணி தனராஜ்
26. பிரின்சி

**பாத்திமா மாதா**
27. ஜஸ்டின் ஸ்நோ குளோரி
28. ஜெசிந்தா கான்ஸ்டன்
29. ராஜா ரீனா
30. ஜெனிட்டா மைக்கேல்
31. ஆல்வின் அனு

**இரக்கத்தின் மாதா**
32. பாப்டிஸ்டா
33. பிரைட்டன் ஜெரோஃபின்
34. இருதயம்மாள் கொன்சால்
35. சித்ரா மோத்தா
36. செல்வி அருள்ராஜ்
37. தமிழ்ச் செல்வி புரோ

**ஜெபமாலை மாதா**
38. சகாயம்மாள் பெனடிக்ட்
39. கல்;யாணி செல்வராஜ்

**ஜூடு அன்பியம்**
40. அந்தோனிசாமி
41. ட்ரைபேனா
42. டெரன்சியா அரிஸ்டோ

**காவல்தூதர்**
43. வெனிட்டாள்
44. எலிஜா இம்மானுவேல்
45. ஜான் ஆல்ட்ரின்
46. சார்லட் பிராங்க்
47. ஜெயா அகஸ்டின்
48. ஜெசிமா கிளாரன்ஸ்
49. ரஸ்கின் வசந்தா
50. சாந்தி ஆல்ட்ரின்
51. ஜோ ட்ரினிஷா
52. ஜூலியஸ் தல்மேதா
53. அல்பின்
54. பிரிசில்லா

**குழந்தை தெரசா**
55. கிறிஸ்டி லிஸ்டன்
56. பெனி மொறாயிஸ்
57. பெர்லி பென்சன்
58. ஜீசஸ் ஜூலி

**குழந்தை இயேசு**
59. மோனிகா செபாஸ்டின்
60. அந்தோனியப்பா பிச்சம்மாள்
61. எமல்டா
62. பிரான்சிஸ் வாஸ்
63. ஆரோக்கியராஜ் ஹெலினா
64. ரதி பிரதீப்

**மணல் மாதா**
65. கெயிட்டன் ஃபர்னான்டோ
66. ரொசாரி கோமஸ்

**லூர்து மாதா**
67. ஜெனோ சேவியர்
68. ரம்யா
69. ரோஸ்லின் தாமஸ்
70. சாண்டினா
71. ஆலிவர் வி. ராயன்
72. சகாயராணி
73. ரஜூலா ஜான் போஸ்கோ
74. ஃபிலோ கோமஸ்

**மிக்கேல் அதிதூதர்**
75. ஜோசபின் பர்னாந்து
76. ஷீபா

**பனிமய அன்பியம்**
77. மெர்சி கோமஸ்
78. சுரேஷ் ஆனி
79. ஜூடு ரதி
80. ஜாய்ஸ்லின் பிரின்சினா

**பவுலடியார்**
81. ராஜா ரோஸ்லின்
82. ஜான்சன் ஒஃபிலியா
83. லீமா ரோஸ்

**பரிபூரண மாதா**
84. சப்னா கின்ஸ்டன்
85. லக்ஷன்
86. மெடோனா

**பொம்பெயி மாதா**
87. மாத்யூ கர்டோசா
88. இம்மாக்குலேட்
89. டிஃபானி அண்டோ
90. லூடா கான்ஸ்டன்
91. ஜான்சிராணி அமல்ராஜ்
92. ஸ்நோ ஆல்பிரிக்

**இராயப்பர்**
93. டெய்சி
94. இந்திரா
95. நேவிசம்மாள்
96. ரெஃப்லின் மிசியர்

**சவேரியார்**
97. டெலிலா அமலன்
98. ரூபா மனுவேல்
99. அண்டன் சகாயம்
100. ஜென்சி ஜோர்னஸ்
101. அனுஷ்யா பீட்டர்

**செபஸ்தியார்**
102. அந்தோனியம்மாள் டென்சிங்
103. ஜெசிலா சேவியர்
104. அஸ்கேனியஸ்

**சிந்தாத்திரை மாதா**
105. நேசம்
106. ஜூடி ஆரோக்கியராஜ்
107. ராஜி ஜஸ்டின்
108. செல்வி லாசர்
109. ரீனா பிரதீப்
110. சில்வியா அன்டோனட்

**சிறுமலர் அன்பியம்**
111. விஜி சகாயராஜ்
112. எல்சிட்டா ஆனந்த்

**சூசையப்பர்**
113. கிறிஸ் ரிஜோ
114. ரூபி கொர்னேலியுஸ்
115. ஹேமலதா

**திருச்சிலுவை**
116. சரோலின் கில்டன்

**வியாகுல மாதா**
117. கெலிண்டன்
118. ராஜா ஜரின்

## *பரிசு பெறுபவர்கள் : 4*

119. வீ. பட்டணம் — ***ஸ்வர்ணா மெசியாஸ்***
120. சங்கரன்கோவில் — ***ஜூடு சைமன்***
121. திருச்சி — ***நவீன் சார்ல்ஸ்***
122. தூத்துக்குடி லூர்தம்மாள்புரம் — ***ஜெயபால்***

## *பாராட்டுக்குரியவர்கள் : 72*

**ஆலந்தலை**
123. மரியம்மாள்
124. பொன்சேகா

**வீரபாண்டியன்பட்டணம்**
125. ரேச்சல் ராயன்

**ஆறுமுகனேரி**
126. தொம்மை அந்தோனி
127. ஜெயராணி

**ஏரல்**
128. ஜாய்ஸ் ரத்தினம்

**புதியம்புத்தூர்**
129. ஹெலன் அன்னமணி

**சென்னை**
130. கமலஜோதி ஜெயசீலன்
131. ஒஃபிலியா தாமஸ்
132. நிகிலா

**பாளையங்கோட்டை**
133. பிரேமா குணசீலன்
134. ரோசி
135. டெனிசா கிளாட்

**சங்கரன்கோவில்**
136. செல்வராணி
137. ஆலன் ஜாக்ப்ரியோ

**பேட்டை**
138. ஹெலனிட்டா

**கயத்தாறு**
139. அமல்ராஜ்

**பெரியகுளம்**
140. குழந்தை தெரஸ்

**திண்டுக்கல்**
141. ரொசாலி

**கோயம்புத்தூர்**
142. லூக்காஸ்
143. ராஜேந்திரன் அருள்
144. ஆஷா தனசீலன்
145. சேவியர் பர்னாந்து

**பல்லடம்**
146. பிரான்சிஸ் ஆர்லன்

**திருச்சி**
147. மோனிட்டா கிறிஸ்டி
148. மேத்யூ விவேக்
149. டோனி
150. ஜான்சி ராணி

**சேலம்**
151. செல்வ நாயகி

**மதுரை**
152. சகோ. அப்போலி;ன்

**வடக்குத்து**
153. ஹென்றிதாஸ்

**பரமக்குடி**
154. சைமன் சாந்தி

<u>**தூத்துக்குடி நகர பங்குகள்**</u>

**திரு இதயங்களின் பேராலயம்**
155. ரமோலா கமிலஸ்
156. ரிமோல்டா
157. சுசீலன்
158. கிரேட்டா ராஜா
159. பெனிட்டா

**குருஸ்புரம்**
160. ஆசீர்வாதம்
161. பௌவுசி ஜோ மைக்கேல்
162. ஜான்சி மெண்டிஸ்
163. பிளசி செல்வராஜ்
164. டெல்பின்

**லயன்ஸ் டவுண் சகாய மாதா**
165. சுகிர்தா
166. ஷெரினா 167. சகாயம்
168. செல்வி ஆன்சலி

**யூதா ததேயு கோவில்**
169. ரோஸ் சேவியர்
170. சகாயராஜ் ரோட்ரிக்ஸ்
171. பிரான்சிஸ் ஜூலியட்

**காந்திநகர்**
172. யூஜினியா கதலியா
173. பெனிட்டன்
174. ரியாலினோ
175. அன்சிட்டா
176. அனிதா
177. பேபி வால்டர்
178. பின்டன் சோஃபியா
179. ஜொஷி

**லூர்தம்மாள்புரம்**
180. மெர்சி
181. லைசி ஜோசப்

**சார்லஸ் கோவில்**
182. சகாயிற்றா மச்சாது

**அன்னை வேளாங்கன்னி கோவில்**
183. செக்கரியா சாமுவேல்
184. ஜொசி குணபாலன்
185. வினிஃபிரட் பிரின்ஸ்டன்
186. ஜெசிந்தா பர்னாந்து

**இஞ்ஞாசியார்புரம்**
187. அற்புத செல்வி
188. சூசை நவீன்

**இரத்னபுரம் சவேரியார் கோவில்**
189. விர்ஜின்
190. தயாபர ராணி

**அந்தோனியார் கோவில்**
191. சோஃபியா விஜய்
192. இருதயம்மாள் கபிரியேல்
193. சுஜாதா மகேஷ்
194. மென்சிலா லொயோலா

**திரேஸ்புரம்**
195. கோல்வின் ஜேசுராஜ்

**பாத்திமா நகர்**
196. மேரி ஹேம்லின்
197. ஜெனோஃபியா

**கோவளம்**
198. சரோபின் ஜோசப்



**கடந்த மாதம் சரியான விடை எழுதியவர்கள் : 189**

**இந்த மாதம் சரியான விடை எழுதியவர்கள் : 198**

# பனிமயப் பகிர்வு

(பேராலயப் பங்கு மக்களுக்கான மடல் - 53)

## டிசம்பர் - 2023

| | | |
|---|---|---|
| அதிபர் & பங்குத் தந்தை | : அருள்முனைவர் குமார்ராஜா | 94431 47823 |
| உதவிப் பங்குத் தந்தை | : அருள்பணி சைமன் ஆல்டஸ் | 74485 18127 |
| களப் பணியாளர் | : சகோதரர் ஆல்ட்ரின் | 94893 19976 |
| பங்கு அலுவலகம் | : | 2320854 |
| பங்கு அலுவலக வாட்ஸ் அப் | : | 82209 47823 |

## திருவழிபாட்டு நேரங்கள்

| தினசரி திருப்பலிகள் | சனிக் கிழமைகளில் | | ஞாயிற்றுக் கிழமைகளில் | |
|---|---|---|---|---|
| காலை 5.30, 6.30 | காலை 5.30, 6.30 | திருப்பலி | காலை 5.00, 6.30, 8.00 | திருப்பலி |
| மாலை 5.30 | காலை 11.00 | செபமாலை, **நவநாள் திருப்பலி** | காலை 9.30 | ஆங்கிலத் திருப்பலி |
| | மாலை 5.30 | திருப்பலி | மாலை 5.30 | திருப்பலி |
| | மாலை 6.30 | நவநாள், நற்கருணை ஆசீர் | மாலை 6.30 | நற்கருணை ஆசீர் |

**ஒப்புரவு அருள்சாதனம்** *தினமும் காலை 07.10 - 07.30*

*சனிக்கிழமைகளில் மாலை 04.30 - 07.00*

- ✓ *திருமுழுக்கு - ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 10.30 (திருவருகைக் காலம், தவக்காலத்தில் திருமுழுக்கு வழங்கப்பட மாட்டாது)*
- ✓ *புதுநன்மை - புதன், சனி, ஞாயிறுகளில் (திருவருகைக் காலம், தவக்காலம், ஆகஸ்ட் மாதம் முழுவதும் மற்றும் மாதத்தின் முதல் சனி மாலை தவிர).*
- ✓ *திருமணம் - பேராலய மரபுப்படி, சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் திருமணம் நடைபெறுவதில்லை. பேராலயப் பங்கினருக்கு மட்டும் ஞாயிறு காலை 11.00. திருவருகைக் காலத்திலும், தவக்காலத்திலும் திருமணம் நடைபெறாது.*
- ✓ *ஞாயிறு மறைக்கல்வி : ஞாயிறு காலை 10.30 - 11.30*
- ✓ *திறன் பயிற்சி வகுப்புகள் : ஞாயிறு மாலை 04.30 - 06.00*
- ✓ *விவிலியப் பாசறை : செவ்வாய் மாலை 06.15 - 08.00*
- ✓ *அன்பியக் கூட்டங்கள் : புதன், வியாழக்கிழமைகளில்*
- ✓ *புதுநன்மை அருள்சாதனம் : 01.01.2024*

*உறுதிப்பூசுதல் மற்றும் புதுநன்மை அருள்சாதனம் பெறவிரும்புவோர் குடும்ப அட்டையுடன் பங்கு அலுவலகத்தில் பதிவு செய்யவும். அதற்கான ஞாயிறு மறைக்கல்வியில் தவறாது கலந்துகொள்ளவும்.*

- ✓ **பங்குத்தந்தையரைச் சந்திக்கும் நேரம்** : *காலை 10.00 மணி - 01.00 மணி*
  *மாலை 04.00 மணி - 05.30 மணி*
- ✓ *இல்லம் மந்திரித்தல், வாகன மந்திரிப்பு போன்றவற்றுக்கு முன்கூட்டியே அலைபேசியில் தகவல் தந்தபின் வந்தால் காத்திருத்தலை, தாமதத்தைத் தவிர்க்கலாம்.*
- ✓ *நோயில்பூசுதல் மற்றும் தவிர்க்க இயலாத அவசரப் பணிகளுக்கு எந்த நேரமும் தொடர்பு கொள்ளலாம். அலைபேசியில் பேசாமல், நேரிலே வந்துவிடுங்கள்.*

## பனிமயச் சுவடுகள்

*(பங்கின் முக்கிய நிகழ்வுகளின் தொகுப்பு)*

495. அக்டோபர் மாத இறுதி நாளான 31.10.2023 செவ்வாய் மாலை பேராலய வளாகத்தில் **செபமாலைப் பவனி** நடைபெற்றது. தொடர்ந்து, நற்கருணை ஆசீருடன் செபமாலை மாதம் நிறைவுக்கு வந்தது.

496. நவம்பர் மாதத்துக்கான **விவிலியப் பாசறை** (எண்: 98) 21.11.2023 செவ்வாய் மாலை 06.15க்கு லூர்து மாதா கெபியில் "இறந்தோர் பற்றிய விவிலியச் செய்திகள்" என்ற தலைப்பில் நடைபெற்றது.

497. இறந்த நம்பிக்கையாளரின் நினைவு நாளான 02.11.2023 வியாழன் அன்று காலையில் 05.00, 05.45, 06.30, 07.15 ஆகிய நேரங்களில் 4 திருப்பலிகள் நடைபெற்றன. மாலையில் திருப்பலி நடைபெறவில்லை. அன்றைய நாள் பங்கு அலுவலகத்துக்கும், திருப்பொருள் விற்பனையகத்துக்கும் விடுமுறை.

498. பேராலயப் பங்கு மேய்ப்புப் பணிக்குழுவின் **16ஆவது பொதுக்குழுக் கூட்டம்** 15.11.2023 புதன் மாலையில் நடைபெற்றது. தற்போதைய பேரவையின் (2021-2023) நிறைவுக் கூட்டமாதலால், கடந்த நான்கரை ஆண்டுகளின் வரவு-செலவு அறிக்கை வாசிக்கப்பட்டது.

499. "வேலை வாய்ப்புக்காகக் காத்திருப்போருக்காக" **பனிமய நோன்பு வழிபாடு (37)** 18.11.2023 சனி அன்று நண்பகல் 11.30 முதல் பிற்பகல் 03.00 வரை நடைபெற்றது. தங்களுக்காக செப விண்ணப்பம் கொடுத்திருந்த 82 பேருக்காக சிறப்பு வேண்டுதல்கள் ஏறெடுக்கப்பட்டன.

500. கிறிஸ்து அரசர் பெருவிழாவை முன்னிட்டு 26.11.2023 ஞாயிறு காலை 10.30 முதல் மாலை 05.00 வரையில் **தொடர் நற்கருணை ஆராதனை** நடைபெற்றது. அன்பியங்கள் மண்டலங்களாகச் சிறப்பித்தனர்.

501. புனித செசிலியாவின் திருவிழாவை முன்னிட்டுப் **பாடகர் குழுவினர், திரைக் குழுவினருக்கான ஒன்றுகூடல்** 26.11.2023 ஞாயிறு மாலை 06.45க்கு நேவிஸ் அரங்கில் நடைபெற்றது. அழைக்கப்பட்டிருந்த 49 பேரில் 30 பேர் கலந்துகொண்டனர். அனைவருக்கும் 2024ஆம் ஆண்டுக்கான விவிலிய நாள்குறிப்பேடும், நினைவுப் பரிசும் வழங்கப்பட்டன.

## பங்கில் நிகழ்ந்தவை



### *வரவேற்கிறோம்*

### I. திருமுழுக்கு பெற்றவர்கள்

| எண் | பெயர் | பெற்றோர் | நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 139. | ஏஞ்சலின் கிறிஷ்டி | விஜயன் - சுகிர்தா | 05.11.2023 | பனிமயம் |



*வாழ்த்துகின்றோம்*

## 2. புதுநன்மை பெற்றவர்கள்

| எண் | பெயர் | பெற்றோர் | நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 175. | ஸ்டீபன் ரித்திஷ் | வின்சென்ட்-ருஃபினா மேரி | 25.11.2023 | ஜூடு |
| 176. | அந்தோணி ராஞ்சோ | வின்சென்ட்-ருஃபினா மேரி | 25.11.2023 | ஜூடு |



*ஆசி கூறுகின்றோம்*

## 3. திருமணத்தில் இணைந்தவர்கள்

| எண் | மணமக்கள் | அன்பியம் | நாள் |
|---|---|---|---|
| 126. | சபினியானுஸ் - ஆனி லார்கின் | சூசையப்பர் | 16.11.2023 |



*செபிக்கின்றோம்*

## 4. இறைவனில் இளைப்பாறியவர்கள்

| எண் | பெயர் | உறவினர் பெயர் | நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 179. | சேசுராஜ் | ஜோவித்தம்மாள் | 10.11.2023 | செபஸ்தியார் |
| 180. | பெர்க்மான்ஸ் ரொட்ரிகோ | அமல்ராணி | 12.11.2023 | அந்தோணியார் |

## நடைபெறவிருப்பவை

- ★ 01.12.2023 தலைவெள்ளி அன்று நோயாளர்கள், முதியோருக்கு **இல்லங்களில் நற்கருணை** வழங்கப்படும்.
- ★ 02.12.2023 முதல் சனி அன்று மாலையில் சப்பரப் பவனியும், தொடர்ந்து நவநாள் வழிபாடும் நடைபெறும். இவை ஸ்நோஸ் பசிலிக்கா யூட்யூப் சேனலிலும், சூர்யா, யாழ் தொலைக்காட்சிகளிலும் நேரலையாக ஒளிபரப்பப்படும்.
- ★ 04.12.2023 திங்கள் அன்று **புனித சவேரியார் திருவிழாத் திருப்பலி** காலை 05.30 மணிக்கு புனித சவேரியார் மண்டபத்தில் நடைபெறும்.
- ★ "குழந்தைச் செல்வத்துக்காகக் காத்திருப்போருக்காக" **பனிமய நோன்பு வழிபாடு** (38) 17.12.2023 ஞாயிறு அன்று நண்பகல் 12.00 முதல் பிற்பகல் 03.00 வரை நடைபெறும். அதற்கு ஆயத்தமாக 11.12.2023 முதல் 7 நாள்களுக்கு நண்பகல் 12.00 முதல் 03.00 வரை நற்கருணை சிற்றாலயத்தில் நோன்பு ஆராதனை நடைபெறும்.

## திருச்சிலுவைச் சிற்றாலயத்தில்...

- ❖ ஒவ்வொரு வெள்ளியும் - நண்பகல் 12.00 மணிக்கு இறைவேண்டலும், தொடர்ந்து திருச்சிலுவை அன்பு உணவும்.
- ❖ ஒவ்வொரு செவ்வாயும் - பகல் 12.30 முதல் 04.00 மணி வரை நற்செய்தி அறிவிப்பு, குணமளிக்கும் நற்கருணை ஆசிர், திருப்பலி.

| எண். | நாள் | கிழமை | செய்தியாளர் | செய்தித் தலைப்பு |
|---|---|---|---|---|
| 154 | 05.12.2023 | செவ்வாய் | அருள்பணி. இசிதோர் | திருவருகைக் கால ஆயத்தம் |
| 155. | 12.12.2023 | செவ்வாய் | அருள்பணி. ரெயோசில் பெப்பி | இரண்டாம்; வருகை |
| 156. | 19.12.2023 | செவ்வாய் | அருள்பணி. மார்ட்டின் குமார் | கிறிஸ்துமஸ் ஆசிகள் |
| | 26.12.2023 | செவ்வாய் | கிறிஸ்துமஸ், புத்தாண்டு | |
| | 02.01.2024 | செவ்வாய் | விடுமுறை | |
| 157. | 09.01.2024 | செவ்வாய் | அருள்பணி. இசிதோர் | புத்தாண்டு ஆசிகள் |



# பனிமய சாட்சியம்

*பனிமய சாட்சியம் : 83*

## ஜேசன் வேலண்டினா - சார்லஸ், கிராப்பட்டி

**புனித தெரசம்மாள் பங்கு, திருச்சி.**

எனக்கு 2012 ல் திருமணம் நடந்தது. முதல் மாதத்தில் குழந்தைப் பேறு கிடைத்தது. ஆனால், இரண்டு மாதத்தில் குழந்தைக்கு வளர்ச்சி இல்லையென்று மருத்துவர்கள் கலைத்து விட்டனர். அதன்பின் ஒரு வருடம் குழந்தை தரிக்கவில்லை. அதன்பின் 2013 ஆம் ஆண்டு எங்கள் வீட்டிலிருந்து பனிமய மாதா கோவிலுக்கு வந்து மாதாவின் முன் மாதுளம்பழம் வைத்து வேண்டிக்கொண்டு வந்து தந்தார்கள். நான் ஒரு செபமாலை செபித்து அந்த மாதுளம்பழத்தைச் சாப்பிட்டேன். இரண்டு மாதத்தில் எனக்குக் குழந்தைப் பேறு கிடைத்தது. என் குழந்தையின் பெயர் ஆரோக்கிய ஆன்ட்ரியா, இப்பொழுது 4ஆம் வகுப்பு படித்துக் கொண்டிருக்கிறாள். மாதாவைப் பார்க்க பல தடைகள் வந்தும் அதை மீறி நாங்கள் குழந்தையோடு வந்திருக்கிறோம். ஒரு பெட்டி மாதுளம் பழங்களைப் பனிமய மாதா பீடத்தில் வைத்து குழந்தையின் கையால் கொடுக்க வேண்டும் என்று வேண்டியிருந்தேன். அதேபோல் குழந்தையின் கையால் மாதுளம்பழம் கொடுத்தோம். அதே போல் ஒருவருக்கு குழந்தைப் பேறும், இன்னொருவருக்கு திருமணம் நடக்க வேண்டுமென்றும் நினைத்து நம்பிக்கையோடு வேண்டியிருக்கிறோம். பனிமயத் தாய்க்கு நன்றி! இயேசுவுக்கே நன்றி! பனிமய அன்னையே வாழ்க!

# பனிமயம்
# வெள்ளிவிழா ஆண்டுக் கொண்டாட்டம்

நமது பனிமயம் இதழ் கடந்த 1999ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் உதயமானது. எனவே, பனிமயம் இதழின் இந்த வெள்ளிவிழா ஆண்டு இம்மாதம் தொடங்கி, எதிர்வரும் 2024 செப்டம்பர் மாதம் நிறைவுபெறும். இம்மாதம் முதல் அனைத்து இதழ்களும் "வெள்ளிவிழா ஆண்டுச் சிறப்பிதழ்" என்னும் சிறப்புடன் வெளிவரும்.

முதல் இதழில் பனிமய இதழின் மேலாளர், வெளியிடுபவராக அப்போதைய பங்குத் தந்தை நினைவில் வாழும் பேரருள்திரு பவுல் ராபின்ஸ்டன் அடிகள், நிர்வாக ஆசிரியராக அப்;போதைய உதவிப் பங்குத் தந்தை அருள்திரு ஜான் சுரேஷ், பொறுப்பாசிரியராக திரு. கலாபன் வாஸ் ஆகியோரின் பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ஆசிரியர் குழுவில் அருள்சகோ. தெரேசா, அருள்சகோ. சிறியா, திருவாளர்கள் தாமஸ் வாஸ், ஜே.பி. ஃபெர்னான்டோ ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். அவர்கள் அனைவரையும் நாம் நன்றியுடன் பாராட்டுகிறோம்.

எதிர்வரும் 25.12.2023 அன்று மாலை நடைபெறவுள்ள கிறிஸ்துமஸ் கலைநிகழ்ச்சிகளின்போது வெள்ளிவிழாக் கொண்டாட்டம் தொடங்கப்படும். வெளிவரவிருக்கும் இதழ்களில் வெள்ளிவிழாப் பயணமும், உடன் பயணிகளும் நினைவுகூரப்படுவார்கள். வாருங்கள், இணைந்து கொண்டாடுவோம் நம் பனிமயம் இதழை!

வெள்ளிவிழாவை முன்னிட்டு கவிதை, கட்டுரை, சிறுகதைப் போட்டிகள் அறிவிக்கப் படுகின்றன.

- கவிதைகளை **"அம்மா"** என்னும் தலைப்பிலும் (16 முதல் 20 வரிகளில்)
- கட்டுரைகளை **"தங்கத் தாரகை"** என்னும் தலைப்பிலும் (400 சொற்களுக்கு மிகாமல்)
- சிறுகதைகளை **"அன்னையைத் தேடி"** என்னும் தலைப்பிலும் (550 சொற்களுக்கு மிகாமல்)

எழுதி எதிர்வரும் 10.01.2024க்குள் அனுப்பி வையுங்கள். சிறந்த படைப்புகள் எதிர்வரும் மாதங்களில் வெளியிடப்படும். இறைவனுக்குத் திருவுளமானால், **"வெள்ளிவிழா சிறப்பு மலர்"** ஒன்றும் வெளிவரும்.

**அருள்பணி. குமார்ராஜா**
மேலாளர், இதழாசிரியர்

# விண்ணக வாழ்வின்
# இருபதாம் ஆண்டு நினைவு அஞ்சலி



தோற்றம்
11.11.1947

மறைவு
21.12.2003

## A. மார்ட்டின் பர்னாந்து

வாழ்ந்திருந்த காலமெல்லாம் எங்கள்மேல்
பொன்மழையால் பாசத்தினைப் பொழிந்து,
உடல் களைக்க ஓடோடி உழைத்து
உயிர் மூச்சை எமக்கெனவே கொடுத்து,
நினையாத நேரத்தில் எங்களைப் பிரிந்து
நித்தியமும் எங்களோடு வாழ,
நிம்மதியாய் இறைவனை நீர் அடைந்தீர்.
உம் நினைவு என்றும் எங்கள் உள்ளத்தில்!

,இதைக் காணும் யாவரும்
இவ்வான்மா நித்திய இறைப்பாற்றி அடைய வேண்டிக் கொள்ளுங்கள்

பிரிவால் வருந்தும்


அன்பு மனைவி : **இருதயமேரி**

**மக்கள், மருமக்கள், பேரன்கள், பேத்திகள்**
மற்றும் **உற்றார் உறவினர்கள்**

*23, பிரமுத்து சந்து, தூத்துக்குடி - 1.*

## எம் அன்புப் பெற்றோர்

| | |
|---|---|
| முதல் ஆண்டு | 31ஆம் ஆண்டு |
| **தொ. செலின் பர்னாந்து** | **அ. ரோசாரியோ மிசியர்** |



| | |
|---|---|
| பிறப்பு : 05.06.1933<br>இறப்பு : 21.10.2022 | பிறப்பு : 06.10.1926<br>இறப்பு : 24.04.1992 |

### பிரிவால் துயருறும்

மகன் : **ஏனஸ்ட் மிசியர்**
மருமகள் : **ஜாக்குலின்**
பேரன் : **ரோசன் மிசியர்**

மகள் : **ஈவ்லின் மிசியர்**
மருமகன் : **அந்தோனி சேவியர்**
பேத்தி : **Dr. ரீத்தி**
பேரன் : **Ad. ஜோஸ்வின்**
பேத்தியின் கணவர் : **Dr. சந்தீப்**
பேரன் : **காட்சன்**
கொள்ளுப் பேரன்கள் : **ஆர்நவ்**
**ராகவ்**

# IN LOVING MEMORY OF DAD & MUM



| CHELLAM CARDOZA | | JOTHI FERNANDO | |
|---|---|---|---|
| BLOOMED | WITHERED | BLOOMED | WITHERED |
| 09-01-1938 | 13-12-2013 | 17-06-1944 | 23-02-2023 |
| AGE:76 | | | AGE:79 |

MARRIED : 29/05/1963

GOLDEN JUBILEE : 29/05/2013

There will be a requiem mass for
the soul of my beloved father
@6:30am 13th Dec 2023@ OLS church.

Fondly remembered and forever missed by
RAJESH CARDOZA&FAMILY
20/76A,Roche Colony
3rd street,Tuticorin

SHINY Ph : 98421 31493